காரணத்தினால்தான் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். தினந்தோறும் அவர்கள் தப்பு செய்கிறார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, உங்கள் பிரச்சினைக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இன்னொரு பிரச்சினையை எடுக்க இருக்கிறேன். எனவே, இதை உரிமைப் பிரச்சினையாக எடுப்பது பற்றி என்னுடைய முடிவைப் பின்னர் அறிவிக்கிறேன். உட்காருங்கள்.

(ஆ) ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி மரணமுற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கைதி ஒருவர் மர்மமான முறையில் மரணம் அடைந்தது குறித்த ஒரு பிரச்சினையை திரு. போளூர் வரதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் இரண்டு உறுப்பினர்கள் (இருக்கையில் இல்லை) நேற்றைய தினம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்கள். இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்திருந்தேன். இப்போது அந்தப் பிரச்சினையைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திரு. போளூர் வரதன்.

முற்பகல் 11–35

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30–4–1995 அன்று மாலை 7.30 மணி அளவிலே ஸ்ரீபெரும்புதூரிலே 36, பெரியதெரு கடம்பத்தூரரைச் சேர்ந்தவர் நடராஜ நாயக்கருடைய குமாரர் தங்கமணி என்பவரை 203 ரூபாய் கொள்ளை அடித்தார் என்பதற்காக காவல் நிலையத்திலே பிடித்துக் கொடுத்ததாகவும் அதன் மீது விசாரணை நடத்துகின்றபோது அன்று இரவே 2 மணிக்கு அவர் தூக்கு போட்டுக்கொண்டதாகவும் இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? பொது மக்கள் மத்தியிலே 2 மணிக்கு அங்கே காவல்துறையைச் சேர்ந்தவர்களால் அவர் அடித்து கொல்லப்பட்டிருக்கிறார் என்று பேசப்படுகிறது. அதுமட்டுமல்ல, அந்த காவல்துறையினுடைய தாழ்வாரங்கள் ஏழு அடி உயரம்தான் இருக்கிறது. ஏழு அடி உயரத்திலே ஒரு மனிதன் தூக்கு போட்டுக் கொள்ள

முடியுமா என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, ஒரு சாதாரண திருடன் செல்லுகின்றபோது தூக்கு போட்டுக்கொள்வதற்கு கயிறையும் கூட எடுத்துச் செல்ல முடியாது. நைலான் கயிறிலே தூக்குப்போட்டுக் கொண்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் நடந்த நிலையைப் பார்க்கின்றபோது அந்த நைலான் கயிறுக்கு மெல்லிசான கயிறுக்கு ஒரு மனிதனை தாங்கக்கூடிய சக்தி இருக்குமா என்பதையும் நீங்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டும் அல்ல. அவர் தூக்கிலே இருந்தார் என்று சொல்லுகிறார்களே தவிர அவர் கீழே இருந்திருக்கிறார். தூக்கிலேயிருந்து கீழே அறுந்து விழப்பட்டிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். 1-ந்தேதி காலை 8 மணிக்குத்தான் அவரைப் பார்த்ததாகவும் அதற்குப் பின்னால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகின்ற வழியிலேயே இறந்துவிட்டதாகவும் சொல்கிறார்கள். நான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வதெல்லாம் ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்திலே அதற்கு முந்தைய நாள் 29-ந்தேதி மாலை எம்.எம். ஜோசப், ஹெட்மாஸ்டர் பஞ்சாயத்து யூனியன் மிடில் ஸ்கூலிலே தண்டலம் என்ற கிராமத்தில் இருக்கின்ற அந்த பள்ளி ஆசிரியர் சம்பளமாக வாங்கிச் சென்ற 23,000 ரூபாயை அதே ஸ்ரீபெரும்புதூரிலே கொள்ளையடித்து இருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து அந்தப் பணத்தை பிடித்துக் கொண்டு போய் காவல்நிலையத்திலே வைத்திருக்கிறார்கள். ஆனால் கொள்ளையடித்தவரை அன்றைக்கு விட்டுவிட்டார்கள். அடுத்த நாள் 203 ரூபாயை கொள்ளையடித்தவரை பிடித்துக்கொண்டுபோய் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். நேற்றையதினம் இங்கே நான் அவையிலே எழுப்புவேன் என்பதை புரிந்து கொண்ட பின்னாலே அந்த 23,000 ரூபாயையும் கொள்ளையடித்தவரையும் பிடித்துக்கொண்டுபோய் வைத்து இருக்கிறார்கள். ரிமாண்டிலே ஒரு காவல் கைதி தூக்கு போடுகிறார் என்று சொன்னால் காவல்நிலையத்திலே சிலர் இருந்திருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னாலும் 23,000 ரூபாயை கொள்ளை அடித்தவர் அந்த ரிமாண்டிலேதான் இருந்ததாகச் சொல்கிறார்கள். நேற்றைய தினம் இருந்திருக்கிறார். அப்படி ஒருவர் இருக்கும்போது வேறு ஒருவர் தூக்கு போடக்கூடிய அவசியம் தேவையற்றது. 203 ரூபாய்க்காக ஒருவர் தூக்கு போடுகின்ற சூழ்நிலை இந்த நாட்டிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இறந்தவர் குற்றவாளியாகவே இருக்கட்டும், நான் இல்லை என்று சொல்லவில்லை. அவர் குற்றம் செய்திருக்கலாம். குற்றவாளிகளை தண்டிப்பதற்கு நீதிமன்றங்கள்

இருக்கின்றன. காவல் நிலையங்களிலே தூக்கு தண்டனை நிறைவேற்றினால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல. ஸ்ரீபெரும்புதூரிலே பல்வேறு காலகட்டங்களிலே ஸ்ரீபெரும்புதூர் காவல்நிலையத்தைச் சேர்ந்தவர்கள் பல குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று நான் இங்கே பேசுகின்றபோது சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. போளூர் வரதன்: இறந்த அந்த தங்கமணி என்பவர் 2 குழந்தைகளுக்கு தந்தை. இரண்டு குழந்தைகளும் சிறிய குழந்தைகள். ஏழ்மை குடும்பத்தைச் சார்ந்தவர் என்று சொல்கிறார்கள். அவர் காவல்துறையைச் சார்ந்தவர்களால் அடித்து கொல்லப்பட்டது உண்மை என்று பொதுமக்கள் பேசுகிறார்கள். தமிழக அரசும் விரைவாக அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தற்காலிக பணி நீக்கம் செய்திருக்கிறார்கள. அப்படியிருந்தும்கூட பொதுமக்கள் அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கச் சென்றால் யார் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அதே அதிகாரிகள் நேற்றைக்கு அங்கேயிருக்கின்ற பொதுமக்களை விரட்டி அடிக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்திலே ஒரு புகார் கொடுக்கச் சென்றாலும்கூட அந்த புகார் மீது அந்த காவல்துறையைச் சார்ந்தவர்கள் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. வடலூரிலே 100 பேருக்கு மேலே விபத்திலே இறந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த நகைகளை கேட்கச் சென்றவர்களுக்கு அந்த நகைகள் பிணத்தோடு எரிந்துவிட்டது என்று பொய் சொல்லி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு வேறு பிரச்சினைக்கு எல்லாம் போனால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியாது. நீங்கள் இதையெல்லாம் காவல் துறை மானியத்திலே பேச வேண்டும்.

திரு. போளூர் வரதன்: தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் செய்திருக்கின்ற கடந்தகால நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாப் பிரச்சினைகளையும் பேச முடியாது. இந்தப் பிரச்சினையில் மட்டும் பேசுங்கள்.

1995 மே 3]

திரு. போளூர் வரதன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நான் சொல்ல வருவது அந்த காவல் நிலையத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்தமாக காவல் துறையைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரும் சமூக விரோதிகளுக்கு கடந்த காலங்களிலும் சரி, இந்த நாளிலும் சரி உறுதுணையாக இருந்துகொண்டு இப்படிப்பட்ட செயல்களைச் செய்கிறார்கள். இப்படி தேவையற்ற முறையில் ஒரு ரிமாண்டு கைதியை அடித்துக் கொன்று இருக்கிறார்கள். அவர்களை பணி நீக்கம் செய்தால் மட்டும் போதாது. அவர்கள் மீது 302 செக்ஷன்படி அவர்களையும் கைது செய்யவேண்டும். அந்த தங்கமணி குடும்பத்தினுடைய சூழ்நிலையைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு--2 குழந்தைகளும், தாயும், பெற்றோர்களும் இருக்கிறார்கள்--அந்தக் குடும்பத்திற்கு ஏதேனும் நிதி உதவி தந்து அந்தக் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்று உங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அந்தத் தொகுதி,-அந்த ஊர், சட்டமன்ற உறுப்பினர் சொல்லிவிட்டார், போதும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) அவர் விரிவாகச் சொல்லிவிட்டார், அதற்கு மேல் வேண்டாம். (குறுக்கீடு) இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சின்ன கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம். உட்காருங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள கடம்பத்தூர் என்ற ஊரைச் சேர்ந்த தங்கமணி என்ற இளைஞர் சிறிய திருட்டுகளில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகின்றது. 30.4.1995 அன்று மாலை 7.30 மணியளவில் ஸ்ரீபெரும்புதூரைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் செட்டியார் என்பவரின் சட்டைப் பையில் இருந்து 203 ரூபாயை

தங்கமணி திருடியபோது, கையும் களவுமாக பிடிக்கப்பட்டு ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்த குற்ற நிகழ்வு குறித்து, ஒரு புகாரும் ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர், அந்த புகாரின் அடிப்படையில், அக்காவல் நிலைய குற்ற எண் 479/95-இல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 379-ன் கீழ் வழக்கு ஒன்றினை தங்கமணி மீது பதிவு செய்து அடுத்த நாளான 1.5.1995 அன்று தங்கமணியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் எண்ணத்துடன் அவரைக் காவல் நிலையத்தில் உள்ள Lock-up--இல் வைத்திருந்ததாகத் தெரிகிறது. அப்போது ஸ்ரீபெரும்புதூர் காவல்நிலைய காவலர்கள், நேரு மற்றும் கண்ணப்பன் ஆகியோர் காவல் நிலைய பாதுகாப்புப் பணியில் இருந்துள்ளனர்.

1.5.1995 அன்று காலை 6.30 மணியளவில் காவலர் கண்ணப்பன் காவல் நிலையத்தில் உள்ள தாழ்வாரத்தில் தங்கமணி ஒரு முனை துண்டிக்கப்பட்ட தூக்குக் கயிறு கழுத்தில் சுற்றிக் கிடந்த நிலையில் தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்துள்ளார். உடன் தகவலை காவல் நிலைய ஆய்வாளருக்கு தெரிவித்துள்ளார். ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலைய ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்து கைதி தங்கமணியை உடனடியாக ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார். அங்கு கைதி தங்கமணியை சோதனை செய்த மருத்துவர் அவர் இறந்த விட்டதாகத் தெரிவித்துள்ளார். பின்னர் காவல் துறையினர் குற்ற எண் 481/95-இல், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174-ன் கீழ், வழக்கு ஒன்றினைப் பதிவு செய்துள்ளனர். அதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் சம்பவ இடத்திற்குச் சென்று பிரேத விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

கைதி தங்கமணியை பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து தவறியதோடு, சந்தேகத்திற்குரிய முறையில் தங்கமணி இறந்து கிடந்ததற்கு ஒரு வகையில் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களான, உதவி ஆய்வாளர் திரு. அங்கப்பன், காவலர்கள் நேரு மற்றும் கண்ணப்பன் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மேற்கு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும். செங்கல்பட்டு சரக காவல் துறை துணைத் தலைவரும் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

1995 மே 3] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

காவல் நிலையத்தில் காவலர்களின் கண்காணிப்பில் இருந்த ஒரு கைதி, சந்தேகமான முறையில் மரணமடைந்து கிடந்ததால், இந்தச் சம்பவம் குறித்து, காவல் நிலையாணை அதாவது Police Standing Order பிரிவு *145*-இன் கீழ் Magisterial விசாரணையை மேற்கொள்ள செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் இந்தச் சம்பவம் குறித்து விசாரணையை மேற்கொண்டு, தனது இறுதி அறிக்கையை அனுப்பி வைத்த பின்பு அதன் மீது தேவையான மேல் நடவடிக்கையை தமிழக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த.. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ராஜபாளையத்தில் மே தினம் *1* ஆம் தேதி அன்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜபாளையத்தில் முன்னறிவிப்பு நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டு இருப்பதுபற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். நேற்றையதினம் இதேபோன்ற பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதே காரணத்திற்காக உங்களுக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.

முற்பகல் *11-45*

திரு. ஜி. பழனிசாமி: யாரை வேண்டுமானாலும் கைது செய்யுங்கள். கைது செய்கிற அதிகாரம் உங்களிடத்தில் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். (கூச்சல்-குழப்பம்) பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்பொழுது-பொதுக் கூட்டத்திலே மே தினப் ,பொதுக் கூட்டத்திலே-பேசிக் கொண்டிருக்கிறேன். அந்தப்